செ.வெ.எண்: 278 நாள்: 1.4.2020

**டெல்லி மாநாட்டில் கலந்து கொண்டவர்கள், வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்களிலிருந்து வருகைபுரிந்தோர் தாங்களாகவே முன்வந்து 1077 மற்றும் 04322 222207 என்ற தொலைபேசி எண்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

டெல்லி மாநாட்டில் கலந்து கொண்டவர்கள், வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்களிலிருந்து வருகைபுரிந்தோர் தாங்களாகவே முன்வந்து 1077 மற்றும் 04322 222207 என்ற தொலைபேசி எண்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் கட்டுப்படுத்திடவும் மற்றும் தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த மார்ச் 8 ஆம் தேதி முதல் 20 தேதி வரை டெல்லியில் நடைபெற்ற நிஜாமுதீன் தப்லிஹி மாநாட்டில் கலந்து கொண்டோருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இருப்பதற்கான அறிகுறி கண்டறியப்பட்டுள்ளது. மேலும், இந்தோனேஷியா, மலேசியா நாடுகளுக்கு சென்று வந்த புதுக்கோட்டை மாவட்டத்தை சார்ந்தவர்களும் உள்ளனர்.

மேற்கண்ட மாநாட்டில் புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து கலந்து கொண்டவர்கள் மற்றும் மேற்குறித்த நாடுகளுக்கு பயணம் சென்று திரும்பியவர்கள் தாங்களாகவே முன்வந்து தங்களது முகவரியை தெரிவிப்பதுடன், அருகில் உள்ள மருத்துவமனைக்கு சென்று உரிய மருத்துவ பரிசோதனை செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். அவர்கள் தாங்களாகவே உரிய மருத்துவ பரிசோதனை செய்து கொள்வதால் சம்மந்தப்பட்டவரின் உடல் நலம் காக்கப்படுவதுடன், அவரது குடும்பம் மற்றும் சமூகத்தில் நோய் தொற்று பரவாமல் தடுக்கலாம்.

மேற்கண்ட டெல்லியில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் தங்களது முகவரியை தெரிவிக்காமல் இருந்து, தாங்களாகவே முன்வந்து அருகில் உள்ள மருத்துவமனையில் உரிய மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளாமல் இருந்து, பின்னர் அவர்கள் கண்டறியப்பட்டால் அவர்கள் மீது நடைமுறையில் உள்ள சட்டங்களின் அடிப்படையில் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்களிலிருந்து வந்து தங்கியுள்ளோர்கள் தங்களது முகவரியை அருகில் உள்ள வட்டாட்சியர் அலுவலகங்கள், கிராம நிருவாக அலுவலகங்கள், ஊராட்சிமன்ற அலுவலகங்கள் மற்றும் காவல் நிலையங்கள் ஆகியவற்றில் தாங்களாகவே ஆஜராகி தங்களது இருப்பிட முகவரியினை தெரிவிக்கவும்.

மேற்கண்ட டெல்லி மாநாட்டில் கலந்து கொண்டவர்கள், வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்களிலிருந்து வந்து புதுக்கோட்டை மாவட்டத்தில் தங்கியுள்ளோர் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் சுழற்சி முறையில் 24X7 இயங்கி வரும் கட்டுப்பாட்டு மைய தொலைபேசி எண்கள் 1077 மற்றும் 04322 222207 ஆகியவற்றிற்கு தொடர்பு கொண்டு தகவல்களை தெரிவிக்க வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---------------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**